# குதிரை முட்டை வாங்கிய கதை

பரமார்த்த குருவும், சீடர்களுடம் மடத்துக்குச் சென்ற பின்னர் எல்லோரிடமும் தாங்கள் ஆற்றில் பட்ட துன்பத்தைச் சொல்லி வருந்தினர்.

அச்சமயம் மடத்தைப் பெருக்கிக் கொண்டு இருந்த கண் தெரியாத ஒரு கிழவி, நடந்ததை எல்லாம் கேட்டுக் கைகொட்டிச் சிரித்தாள்.

அவள், அவர்களை நோக்கி, ''நீங்கள் ஆற்றைக் கடந்து வந்தவுடன் கணக்குப் பார்த்ததில் மாறுபாடு வந்தது. தன்னையாவது வேறு ஒருவனையாவது விட்டுவிட்டு எண்ணினால் கணக்கு தப்பாகத்தான் வரும். நடந்தது சரி. இனிமேல் வேறு எந்த சமயத்திலாவது இம்மாதிரியான துன்பம் ஏற்படாது இருப்பதற்கு உங்களுக்கு நான் ஒரு வழி சொல்கிறேன் உன்னிப்பாகக் கேளுங்கள்.''

''காட்டில் கிடக்கிற மாட்டுச் சாணத்தை எடுத்து நன்கு பிசைந்து, அடைபோல் தட்டி எல்லோரும் வட்டமாக அதைச் சுற்றி இருங்கள். பின்னர் உங்கள் அனைவருடைய மூக்கின் நுனி சாணத்தில் படும்படி குனிந்து, அழுத்தியவுடன் நிமிர்ந்து சாணத்தில் உள்ள குழிகளை எண்ணினால், கணக்கு தவறாமல், இத்ததனை பேர் என்று எளிதில் அறிந்து கொள்ளலாம். அறுபது, எழுபது வருடங்களுக்கு முன் பத்துப் பெண்கள் ஒன்று சேர்ந்து, இம்முறையில்தான் கணக்குப் பார்த்தனர். இதை அறிந்து கொள்ளாமல், ஏன் வீணாக இரும்புத்தடியால் அடிபட்டதும் அல்லாமல் நாற்பத்தைந்து பணத்தையும் இழந்தீர்கள்' என்றாள்.

வேலைக்காரி கூறியதை எல்லாம் கேட்ட பரமார்த்த குருவும், சீடர்களும் ''இது ஒரு நல்ல வழிதான். பணமும் செலவாகாது. நம்மில் யாருக்கும் இந்த வழி தெரியாமல் போய் விட்டதே'' என்று துயரமுற்றார்கள்.

பின்னர் சீடர்கள் குருவை நோக்கி ''எல்லாக் காரியத்துக்கும் ஒரு குதிரை வாங்கினால் நல்லது ஐயா. எப்படியாவது உங்களுக்கு ஒரு குதிரை வாங்கித் தரவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்'' என்று சொன்னார்கள்.

அதைக்கேட்ட குரு ''ஒரு குதிரையின் விலை என்னவாக இருக்கும்'' என்று கேட்டார்.

சீடர்கள் ''ஐம்பது அல்லது நூறு பொன்னிற்குக் குறையாமல் இருக்கும்'' என்று கூறினார்கள்.

அதற்குக் குரு ''அவ்வளவிற்கு இடமில்லை'' என்று கூறினார். இவ்வாறு குருவும் சீடர்களும் பல நாட்கள் எண்ணமிட்டனர்.

ஒரு சமயம் அவர்கள் மேயவிட்ட கறவைப் பசு, மடத்துக்குத் திரும்பி வராததால் மறுநாள் மட்டி என்ற சீடன், அருகில் உள்ள கிராமங்களில் சென்று தேடிவிட்டு, ஏமாற்றத்துடன் மடத்துக்குத் திரும்பி வந்தான்.

அவன் குருவை நோக்கி ''ஐயா! எங்கு தேடியும் பசுவைக் காணோம். ஆனால் அதிர்ஷ்டவசமாக மிகக் குறைந்த விலையில் ஒரு குதிரை அகப்பட்டது'' என்று உற்சாகத்துடன் சொன்னான்.

அதைக்கேட்ட குரு ''அது எப்படி? என்று வியப்புடன் கேட்டார்.

மட்டி ''ஐயா, எல்லா இடங்களிலும் பசுவைத் தேடிவிட்டு, இறுதியாக ஓர் ஏரிக்கரை அருகே சென்றபோது, தங்களுடைய அருளால் அங்கு என்னுடைய இரண்டு கைகளாலும் கட்டிப்பிடிக்க முடியாத அளவில் குதிரை முட்டைகளைக் கண்டேன். அருகில் பெட்டைக் கழுதைகள் சில மேய்ந்து கொண்டிருந்தன. சில படுத்திருந்தன.

அங்கே இருந்த ஒருவனிடம் ''இவை குதிரை முட்டைகள் தானே'' என்று சந்தேகத்தோடு கேட்டேன்.

அவன், அவற்றைக் குதிரை முட்டைகள் தான் என்றும், ஒவ்வொன்றின் விலை நாலைந்து பொன் என்றும் கூறினான். மேலும் அவன் ஐயா நல்ல சமயம்! உயர்தரமான குதிரைகள் எளிதில் கிடைக்கின்றன. நாம் எப்படி பழக்குகிறோமோ அப்படியெல்லாம் இணங்கி வரக்கூடியவை'' என்று சொன்னான். மட்டி கூறியதற்கு எல்லோரும் ஒத்துக்கொண்டு ஐந்து பொன்னை அவனிடம் கொடுத்துத் துணைக்கு மடையனையும் அனுப்பினர்.

மட்டி, மடையன் ஆகிய இருவரும் சென்ற பின்னர், மூடன் மனதில் ஒரு ஐயம் தோன்றவே அவன் மற்றவர்களை நோக்கி மட்டி கூறியதில் இருந்து குதிரை முட்டை மிகப் பெரியதாக இருக்கும் என்று அறிய முடிகிறது. அம்முட்டையை அடைகாத்தால் தானே குதிரைக் குட்டி வெளியே வரும். அத்தனை பெரிய முட்டையை யார் அடை காப்பது? பதினைந்து கோழிகளை வைத்தாலும் போதாது. அவை நிற்கவும் மாட்டாது. எனக்கு எந்த வழியும் தோன்றவில்லை. அப்புறம் ஆகும் வழி என்ன கூறுங்கள்'' என்று துயரத்துடன் கூறினான்.

மூடன் கூறியதைக் கேட்ட குருவும் மற்ற இரண்டு சீடர்களும் மிரளமிரள விழித்து ஒருவரை ஒருவர் பார்த்தனர். அவர்களுக்கு எந்த வழியும் தோன்றாததால் மௌனமாக இருந்தனர். கடைசியில் குரு ஒரு நம்முள் யாராவதுதான் அடைகாக்க வேண்டும். வேறு வழி கிடையாது'' என்று கூறி, எதிரில் இருந்த மூன்று சீடர்களையும் தனித்தனியே கேட்டார்.

ஆனால் அவர்கள் மூவரும் ஒவ்வொரு காரணம் காட்டித் தட்டிக் கழிக்க முயன்றனர்.

முதல் சீடனான மூடன், ''நாள்தோறும் நதிக்குப் போய் நீரும், காட்டுக்குப்போய் எரி விறகையும், நான்தான் கொண்டு வருகிறேன். ஆதலால் நான் எவ்வாறு அடை காக்க முடியும்'' என்று சொன்னான்.

இரண்டாவதாக மூர்க்கன் என்ற சீடன் ''தினமும் இரவும் பகலும் பத்துப் பேருக்கு உணவும், பலவகைக் கறிகளும் சமைப்பதற்காக நான் அடுப்படியில் வெந்து சாகிறேனே! எவ்வாறு நான் அடைகாக்க முடியும்'' என்று சொன்னான்.

மூன்றாவதாக, மிலேச்சன் என்ற சீடன், ''நான் நாள்தோறும் அதிகாலையில் ஆற்றுக்குப் போய்க் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, நந்தனவனத்துக்குப் போய் மலர்களை பறித்துத்து மாலையாகத் தொடுத்து கடவுள் திருவுருவங்களுக்குப் போடுகிறேன். மேலும் தூபதீதபம் காட்டி, கடவுள் வழிபாடு செய்வதற்கு வேண்டிய உதவி

செய்கிறேன். இவ்வாறு இருக்கும்போது நான் எப்படி அடை காக்க முடியும்'' என்று கேட்டான்.

அதற்கு குரு, ''சீடர்களே! அப்படிப் பார்த்தால், குதிரை முட்டை வாங்கி வரப் போயிருக்கும் இரண்டு சீடர்களுக்கும் கூட நிறைய வேலைகள் உள்ளன. மடையனுக்கு, இங்கு வந்து போகிறவர்களின் வழக்குகளை விசாரித்துத்த தீர்ப்பும் வழங்கவே நேரம் போதவில்லை.

''மட்டிக்கு நாம் ஏவிய நேரங்களில் கடைக்கோ, சந்தைக்கோ பேட்டைக்கோ செல்வதேற்கே நேரம் சரியாக உள்ளது. ஆதலால் நான் அந்த முட்டையை மடியில் வைத்து கரங்களாலே தழுவி, போர்வையால் மூடி கண்ணும் கருத்துமாய் இருந்து அடை காக்கிறேன். முட்டை முழு வளர்ச்சி அடைந்து குதிரை பருவத்தை அடைந்தால் அதுவே போதும்'' என்று சொன்னார்.

இவ்வாறு, மடத்தில் ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், மட்டியும் மடையனும் ஏரிக்கரையை அடைந்தனர்.

அங்கு சாம்பற் பூசணிக்காய்கள் திரள்திரளாக இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்து அருகில் இருந்த குடியானவனிடம் சென்று அப்பனே இங்குள்ள குதிரை முட்டைகளில் ஒன்றைக் கட்டாயம் எங்களுக்கு விலைக்குத் தர வேண்டும்,'' என்று கெஞ்சிக் கேட்டனர்.

அவர்களின் மூடத்தனத்தை அறிந்து மனதுக்குள் நகைத்துக் கொண்ட குடியானவன் ''இவை உயர்தரமான குதிரை முட்டைகள். அதிக விலை கொடுத்து உங்களால் வாங்க இயலுமா?'' என்று வினவினான்.

அதற்கு அவர்கள் ''அப்பனே முட்டையின் விலை ஐந்து பொன் என்று நாங்கள் அறிவோம். எங்களுக்கு உண்மையான விலை தெரியாதது போல் நீ ஒரேயடியாக உயர்த்திக் கூறுகிறாய்! எங்களிடம் உள்ள ஐந்து பொன்னை வாங்கிக் கொண்டு நல்ல முட்டையாக ஒன்று கொடு'' என்று ஜம்பமாக கூறினார்கள்.

அதற்குக் குடியானவன் ''உங்களைக் கண்டால் நல்ல குடும்பத்தினர் என்பது தெரிய வருகிறது. ஆதலால் இந்த விலைக்குத் தர ஒப்புக் கொள்கிறேன். உங்களுக்கு விருப்பமான முட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் இத்தனை மலிவாக வாங்கியதை யாரிடமும் கூறாதீர்கள்'' என்று பொங்கி வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு கூறியபடி, அவர்களிடமிருந்து ஐந்து பொன்னை வாங்கிக் கொண்டான்.

மட்டியும் மடையனும் ''நாங்கள் ஏன் அதை வெளியே கூறுகிறோம்'' என்று சொல்லிவிட்டு எல்லாவற்றையும் விட பெரிய அளவில் தெரிந்த பூசணிக்காயை எடுத்துக் கொண்டு கிளம்பினர். இருவரும் சேர்ந்து குதிரை முட்டையை தூக்கி ஊஞ்சல் பலகை ஒன்றின் மேல் வைத்தார்கள். அப்பலகையை தலைமேல் வைத்துக் கொண்டு மடத்தை நோக்கி நடந்தனர்.

மட்டி, ''அரிய பெரிய செயல்கள் எல்லாம் தவவலிமையால் கைகூடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது எவ்வளவு உண்மை என்று இப்போது தெரிகிறது. நம் குருதேவரின் தவ ஆற்றலால் நூறு நூற்றம்பைது பொன் மதிப்புள்ள உயர்ரகக் குதிரையை மாயப் பொடி போட்டு, பறித்துக் கொண்டு செல்வதுபோல் எவ்வளவு எளிதாக ஐந்து பொன்னுக்கு வாங்கிக் கொண்டு செல்கிறோம்' என்று பக்திப் பரவசத்தோடு கூறினான்.

அதைக்கேட்ட மடையன் ''இதில் ஐயம் என்ன! பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'' என்று கூறுவதை நீ கேட்டது இல்லையா? நம் குரு தர்மசீலர் என்பது. அவருக்கு இப்போது கிடைத்துள்ள இந்தக் குதிரை முட்டையின் அளவிலேயே 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' தெரிகிறது.

மடையன் கூறியதை எல்லாம் கேட்டமட்டி, ''அதில் சந்தேகம் என்ன? விதை ஒன்று போடச் சுரை ஒன்று காய்க்குமா? நல்வினை நன்மையைத்தான் தரும்; தீவினை தீமையைத்தான் தரும். நன்மையும் தீமையும் பின்வரக் காணலாம் என்று பெரியவர்கள் கூறி இருக்கிறார்கள் அல்லவா'' என்று கூறினான். இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் மடத்தை நோக்கி நடந்தனர். (தொடரும்)